1983 பிப்ரவரி 7]

இராணுவத்தில் பணிபுரிய ஒப்புதல் அளித்தால், அவர்களுக்கு அத்தகைய சலுகைகள் கொடுப்பதற்கு மத்திய சர்க்காருக்கு மாநில சர்க்கார் ஆலோசனை கூறுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் கட்டாயப்படுத்துவதற்கு இல்லை. ஆனால், அப்படி இராணுவத்தில் சேரவேண்டுமென்று விரும்புகின்ற மாணவர்களை இராணுவத்தில் எடுத்துக்கொள்வதற்கு அவர்கள் தயாராக இருக்கிறார்கள். போதுமானவர்கள் போகவில்லை என்ற நிலைமை இருக்கிறதே தவிர, மற்றபடி இராணுவத்திலே சேருவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. அதிலேயும், குறிப்பாக, பஞ்சாப் மாநிலத்திலே இருக்கிற இளைஞர்கள் நிறைய பேர்கள் இராணுவத்தில் சேர்ந்து, அதனால் அவர்கள் நாட்டுக்குப் பாடுபடுகின்றார்கள் என்பதோடு வேலையும் பெற்று, ஒரு 10 அல்லது 15 ஆண்டுகள் இராணுவத்தில் சேவை செய்துவிட்டு, பின்னர் ஓய்வுபெற்று, வீட்டுக்கு, அல்லது தங்கள் கிராமங்களுக்கு வந்து, வேறு தொழில்களை செய்கிறார்கள். இன்றைக்கு பஞ்சாப் மாநிலம் ஒரு நவீன பஞ்சாப்பாக தொழில் துறையிலே முன்னேறியிருக்கிறது. ஆனால் அந்த அளவிற்கு இராணுவத்தில் சேரவேண்டுமென்கிற எண்ணம் புறநானூற்றைப் பற்றிப் பேசும் தமிழ்நாட்டில் இல்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆம்பூர் நகரில் மாவட்ட முன்சீப் நீதிமன்றம் அமைக்கும் திட்டம்

* வினா எண். 164—திரு. ந. குலசேகரபாண்டியன்: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வடாற்காடு மாவட்டம் ஆம்பூர் நகரில் மாவட்ட முன்சீப் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது முதல் அமுலுக்கு வரும் ?

மாண்புமிகு திரு சி. பொன்னையன் : (அ) அண்ட் (ஆ) ஆம்பூர் நகரில் மாவட்ட முன்சீப் நீதிமன்றம் அமைப்பது பற்றிய செயற்குறிப்பு சென்னை உயர்நீதி மன்றத்திடமிருந்து பெறப்பட்டு, நிதித் துறையோடு கலந்தாலோசிக்கப்பட்டு வருகிறது.

TRUTH ALONE TRIUMPHS